பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
விநியே கஸ்தர்
ஜீவா
பல்பொருள் வாணிபம்
நெல்லியடி பஜார்
நெல்லியடி.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 03 திங்கட்கிழமை (18-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 364

★ அரசு - புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை

# நடுநிலையாளர் நிலையில் இருந்து நோர்வே அரசு விலகிக்கொள்ளும்?

## அரசியல் அவதானிகள் சந்தேகம்

(கொழும்பு விசேட நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் பொதுஜன ஐக்கிய முன்னணிஅரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு வரும், நோர்வே அரசு தனதுசமாதான முயற்சிகளிலிருந்து விலகிக் கொள்ளக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதாக அரசியல்அவதானிகள் கருதுகின்றனர்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் இலங்கைஅரசின் ஜனாதிபதி சந்திரிக்காவின் உரைக்கு மாறாகபிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும், வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் கூறிவருவதே இதற்குரிய காரணம்என்று தெரியவருகிறது.

ஆரம்பத்தில் நோர்வே அரசின் ஏற்பாட்டின் கீழ் அரசும் புலிகளும் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சிற்கு சம்மதம் தெரிவித்து உரைகள் ஆற்றியுள்ள போதும் அரசின் உயர் மட்டத் தலைவர்களுக்கிடையே தினமும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டவண்ணமுள்ளன.

தமிழீழத்திற்கு குறைவான எத்தீர்வையும் ஏற்று கொள்ளக்கூடிய நிலையில்விடுதலைப் புலிகள் இல்லாத போதிலும் புலிகளைத் திருப்திப் படுத்தக்கூடிய தீர்வை அரசு முன்வைத்தாலும் சிங்கள பேரினவாதக் கட்சிகளான சிஹல உறுமய, மற்றும் மதவாதிகள் இதற்கான ஒப்புதல் அளிக்க மாட்டார்கள் என்ற நிலைப்பாடும், அரசு மீது நோர்வே வைத்துள்ள நம்பகத் தன்மையை கேள்விக் குறியாக்கியுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்குள்ளும் சிங்களப் பேரினவாதத்திற்கு துணை போகும் கருத்துடையவர்களும் இருப்பதினால் நோர்வேயின் நம்பகத் தன்மையை மேலும் கேள்விக் குறிக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## சமாதான பேச்சுகுறித்து நோர் அறிக்கைவெளியிடும்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்பட்டு வரும் நோர்வே அரசுதான் இதுவரைகாலமும் எடுத்த சமாதான முயற்சிகள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் விடுதலைப்புலிகளுடனும், அரசுடனும் நோர்வே நடாத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இந்த விளக்க அறிக்கை இன்று அல்லது நாளைவெளி வரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது

அரசாங்கத்தையும் விடுத

(8-ம்பக்கம் பார்க்க)

## சிறுமி மீது பலாத்காரம் முதியவருக்கு 6 மாதசிறை

(வவுனியா)

இடம் பெயர்ந்துவவுனியாவிலுள்ள நலன்புரி நிலையத்தில் வசித்துவந்த பதினொரு வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய அறுபதுவயது முதியவருக்கு 1500ரூபாதண்டப் பணமும் ஆறுமாதச் சிறைத்தண்டனையும் வழங்கி வவுனியா மாவட்ட நீதிபதி எம் இளஞ்செழியன்தீர்ப்பளித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித்தெரிய வருவதாவதுஇடம் பெயர்ந்து பிரஸ்தாப சிறுமி வசித்து வந்த நலன்புரிநிலையத்துக்கு அருகில் கடையொன்றினை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளில்

(கொழும்பு)

அரச தரப்பையும், எதிர்க்கட்சியையும் சார்ந்த முக்கிய அரசியல் தலைவர்கள் தற்போது நாட்டில் இல்லை.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னதாகவே ஜனாதிபதி வெளிநாடு சென்றிருந்தார்.

இது தவிர அமைச்சர்களான ஜி. எல். பீரிஸ், எஸ். பி.திஸநாயக்கா, மங்களசமரவீர, மகிந்தராஜபக்ஷ, இந்திக குணவர்த்தன, ரவூப் ஹக்கீம் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே ஆகியோர் அரசின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை எதிர்க்கட்சியின் பக்கத்தில் ஐக்கியதேசிய கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய தற்போது லண்டனில் தங்கியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர்ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும்

## சமாதானப் பேச்சு நடப்பது சந்தேகமே?
### வி. பி. தேவராஜ் உரை

(கண்டி)

தமிழீழ விடுலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர்தினஉரையும் ஜனாதிபதி சந்திரிகாவின் உரையும் சமாதானப் பேச்சுக்களை லக்ஷ்மன் கதிர்காமரின்அறிக்கையும், பேச்சும் அதற்கு மாறாக உள்ளது மட்டுமல்லாமல் சமாதானப்பேச்சில் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## பிரதமரின் கார்

அரசியல் தலைவர்கள் தற்போது நாட்டில் இல்லை.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னதாகவே ஜனாதிபதி வெளிநாடு சென்றிருந்தார்.

மகிந்தராஜபக்ஷ, இந்திக குணவர்த்தன, ரவூப் ஹக்கீம் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே ஆகியோர் அரசின் சார்பிலும், தனிப்பட்ட

யின் பக்கத்தில் ஐக்கியதேசிய கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய தற்போது லண்டனில் தங்கியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர்ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் புதன்கிழமை வெளிநாடு செல்லவுள்ளார். அத்துடன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

(கண்டி)

தமிழீழ விடுலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர்தினஉரையும் ஜனாதிபதி சந்திரிகாவின் உரையும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமென்ற நம்பிக்கையையூட்டியது. ஆனால் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின்அறிக்கையும், பேச்சும் அதற்கு மாறாக உள்ளது மட்டுமல்லாமல் சமாதானப்பேச்சில் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தொழிலாளர் ஐக்கியமுன்னணியின் ஆரம்ப

(8ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் கார் விபத்தில் சிக்கியது

(கொழும்பு)

பிரதமர் ரட்ணஸ்ரீவிக்கிரமநாயக்காவின் கார் நேற்று கடுவெல பிரதான வீதியில் விபத்துக்குள்ளானது.

அண்மையில் ஜனாதிபதியினால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து பிரதமருக்கு வழங்கப்பட்ட, குண்டு துளைக்காத சொகுசுக் காரே மேற்படி விபத்தில் சிக்கி பலத்த சேதமடைந்தது.

நேற்று பிரதமரை ஏற்றிச் சென்று பலாங்கொடையில் இறக்கிவிட்டு கடுவெல பிரதான வீதியூடாக வந்தபோதே இவ் விபத்துச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இவ்விபத்தில் எவரும் காயமடைய வில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பாரிஸ் மாநகரில் இன்று ஐக்கிய தேசிய கட்சி ஆர்ப்பாட்டம்

[கொழும்பு]

இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இன்று பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடைபெறும் போது ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள், அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை போன்றவற்றைக் கண்டித்தே இவ் வார்ப்பாட்டம் பரிஸ் மாநக

(8ஆம்பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்தாலும் புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடரும்

### பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, போச்சுகள் சுமுகமாக இடம் பெற்றாலும், புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடர்ந்து இடம் பெறும்.

இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நேற்று தியத்தலாவை வான்படை பயிற்சி முகாமில் புதிய விமானப் படை வீரர்கள் பயிற்சி முடித்து வெளியேறும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பிரதமர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

விடுதலைப் புலிகளோடு இடம் பெறும் பேச்சுவார்த்தை நல்ல முறையில் சுமுகமாக இடம் பெற்றாலும் அவர்களுக்கு எதிரான யுத்தத்தை நாம் தொடர்ந்தும் நடத்த வேண்டும். ஏனெனில் புலிகள் தாம் பலவீனமடைந்

→8ஆம் பக்கம் பார்க்க

## மாநகரசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர மேயர் ரவிராஜ் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் 2001ம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்படும்.

(ந-4)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**வாங்க விற்க**

உதிரிப் பாகங்களிற்காக ரி.வி. றேடியோ, டெக்குகள் வாங்கப்படும். ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்தித்தரப்படும். அன்ரனா பொருத்தித்தரப்படும். வீனஸ் டெல்கா 140 கே. கே. எஸ் வீதி (சத்திரசந்தி முன்பாக) யாழ்ப்பாணம். T. P 2064 (1991)

## வலி கிழக்கில் வீதிகள் திருத்தம்

(அச்சுவேலி)

வலிகிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட நான்கு வீதிகளை புனரமைக்க ஐந்துமில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி ஈ.பி.டி.பி. யின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய யாழ்.மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கே.வி. குகேந்திரனால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வலி.கிழக்கு பிரதேசசபைத்தலைவர்பூ. குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிதியினைப் பயன்படுத்தி அச்சுவேலி சரஸ்வதி வித்தியசாலை வீதி, புத்தூர் குமாரசாமி வீதி, அச்செழு வினேவாகி வீதி, மற்றும் நீர்வேலி வெள்ளவாய்க்கால் ஆகியவை இவ் வருட இறுதிக்குள் செப்பனிட நடவடிககை எடுக்கப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பி. யின் கோப்பாய் தொகுதி அமைப்பாளரும் பிரதேச சபை உப்தலைவருமான யு.எல்.ஏ ரவி தெரிவித்துள்ளார். (இ)

## இராசி பலன்

18/12/2000

(மார்கழி 3 திங்கள்)

அட்டமி மு.இ 10.48 வரை
உத்தரம் பி.இ 12.26 வரை
ராகுகாலம் 7.53-9.23
சுபநேரம் 12.23-1.53
சித்தம் கால அஷ்டமி

**மேடம்**
பகைவர் விலகுவர், காரியம் கைகூடும், சந்தோஷமானசம்பவம், மனப்பயம்.

**இடபம்**
காரிய தாமதம், புத்திரரால் கவலை, லட்சுமீகரம், சரீர பீடை.

**மிதுனம்**
ரோகபயம், முயற்சிதாமதம், தாய்வழி உறவு, சுகக்குறைவு

**கடகம்**
தனவரவு, பிரயாணம், சகோதரர் உதவி, நினைத்த காரியம் கைகூடும்

**சிங்கம்**
வாககுகலகம், தனவிரயம், ரோகம், முயற்சி தாமதம்

**கன்னி**
கற்பனை மிகுதி, காரியம்கைகூடும், தேகசெளக்கியம், சத்துரு பயம்

**துலாம்**
பிரயாணம், சுபசெலவு, புத்திக் குறைவு, எதிர்பாராத அரச நன்மை

**விருச்சிகர்**
காரியசித்தி, தனலாபம், கீர்த்தி, சிறுவியாதி,

**தனுசு**
தொழில்மேன்மை, அதிகாரம் நிலைப்பேறு, முயற்சி பலிதம்

**மகரம்**
பிரயாணம், காரிய தமாதம், பணச்செலவு, தந்தை வழி உறவு

**கும்பம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண அலைச்சல், காரிய தாமதம், அரச நன்மை

**மீனம்**
பிரயாணம், களஸ்திர சுகம், காரிய ஜெயம், செளக்கியம்

*(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# மட்டக்களப்பில் யுத்தத்தை நிறுத்தக் கோரி சமாதானப் பேரணி

(மட்டக்களப்பு)

இலங்கை சுதந்திர மனித அபிவிருத்தி கழக ஏற்பாட்டில் நேற்றுக் காலை சமாதானத்தை வலியுறுத்தி மட்டக்களப்பு நகரில் சமாதானப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்புகத்தோலிக்க தேவாலயம் முன் மு.ப 10 மணியளவில் ஆரம்பமாகி மத்திய வீதியூடாக மகாத்மா காந்தி சதுக்கத்தில் ஒரு மணி நேரம் தரித்து நின்ற பின் திருமலை வீதியூடாக அரசடி சந்தி, மட்டு வின்சர் மகளிர் வீதியூடாக வில்லியம்ஸ் மண்டபத்தை வந்தடைந்தது.

அங்கு சமாதானக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. யுத்தம் வேண்டாம், வன்முறை வேண்டாம், யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதுபோன்றகோஷங்களை இச்சமாதானப்பேரணியில் கலந்துகொண்டவர்கள் எழுப்பினர். (உ-60)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் யுனிசெப் நிறுவனத்தினால் 5முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

பின்தங்கிய நிலையில் அடிப்படைவசதிகள் இன்றி இயங்கிய 5 முன்பள்ளிகளுக்கேஇவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அனலைதீவு அருணோதய முன்பள்ளி, எழுவைதீவு தொம்மையப்பர் முன்பள்ளி ஊர்காவற்றுறை அண்ணா முன்பள்ளி, தம்பாட்டி மனோன்மணி அம்பாள் முன்பள்ளி, சின்னமடுமாதா முன்பள்ளிஆகியவற்றுக்கே கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

மேற்படி முன்பள்ளியின் ஆசிரியர்களிடம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் வைத்து ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே. எக்ஸ். செல்வநாயகம் இவற்றை வழங்கினார். (உ-75)

## சிரமதானம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் அண்மையில் மாபெரும் சிரமதானப்பணி ஒன்று இடம்பெற்றது

ஜே/49, ஜே/50, ஜே/51 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 250 பொது மக்கள் இச் சிரமதானப் பணியில் பங்கெடுத்தனர்.

இச் சிரமதான பணியின் போது, ஊர்காவற்றுறை நகர வீதிகளின் இருமருங்கும் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக காணப்பட்ட மரக் கிளைகள் பல வெட்டப்பட்டதுடன் புல் பூண்டுகளும் அகற்றப்பட்டன. (உ-75)

## ஆலய புனருத்தாரணம்

(நல்லூர்)

ஊரெழு ஸ்ரீ வீரசத்தி விநாயகர் ஆலயத்தின் இராசகோபுரத் திருப்பணி, முன் மணிமண்டபம் அமைத்தல், புனருத்தாரண வேலைகள் என்பன 2001 ஆம் ஆண்டு முற்பகுதியில், ஆலய மகோற்சவம் பூர்த்தியானதும் நடைபெறவுள்ளதாகப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (உ-103)

## பயிற்சி வழங்கதடை

(யாழ்ப்பாணம்)

அரசமற்றும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கு இது வரை யாழ்ப்பாணத்தில் கம்பியூட்டர் பயிற்சிவழங்கிய தனியார் நிறுவனத்திற்கு அவ் உரிமைமறுக்கப்பட்டுவேறுஒர் நிறுவனத்திற்கு மேற்படிபயிற்சி வழங்க அனுமதி கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து பாதிக்கப்பட்ட கணனிப்பயிற்சி வழங்கும்நிறுவனம் கொழும்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ததைஅடுத்து பயிற்சியை ஒத்திவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ.க)

## யாழ். போதனா வைத்தியசாலையில், நவீன வசதிகள் இல்லை நோயாளர்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

தற்கால நவீன மருத்துவ முறைகளுக்கு ஏற்ப யாழ். போதனாவைத்தியசாலைக்கு நவீனகட்டட வசதிகளும், நவீன மருத்துவ உபகரணங்களும் ஆய்வு கூட வசதிகளும் இல்லாதிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதனால், இங்கே சத்திர சிகிச்சை மேற்கொள்ளக்கூடிய திறமை வாய்ந்த வைத்தியர்கள் இருக்கின்ற போதிலும், பல நோயாளர்களை கொழும்புக்கு அனுப்பி சிகிச்சையளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதுடன் அவசர நோயாளர்கள் பலவிதசிரமங்கள் மத்தியில் கொழும்பு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படிவசதியீனங்கள் காரணமாக திறமையும் அனுபவமும் வாய்ந்த வைத்தியர்கள் பலர் இருக்கின்றபோதிலும் அவர்களது செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-12)

# ப. நோ. கூ. சங்க கிளைகளில் பாவனைக்குதவாத உணவு பொருள் உடன் நடவடிக்கைக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், தெல்லிப்பழை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் கிளைகள் மற்றும் களஞ்சியங்கள் ஆகியவற்றில் மனிதபாவனைக்கு ஒவ்வாத பெருந்தொகையான அரிசி, திடீர் பரிசோதனைக்குழு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்களை அடுத்து, இது விடயத்தில் வடமாகாண புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் வடக்குக்கிழக்கு தமிழ் விவகார அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தாவின் பணிப்பின் பேரில் உடனடி நடவடிக்கைக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவங்கள் பற்றி யாழ். அரசாங்க அதிபருடாக விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது. இச்சம்பவங்கள் பற்றிய விபரங்களை யாழ் மாவட்ட பா. உ. கே வி குகேந்திரன் அமைச்சரின் கவனத்திற்கு தெரியப்படுத்தினார்.

இந்நிலையில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம வழங்கப்படும் சகல பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளுக்கும் (களஞ்சியங்களுட்பட) திடீர்ப்பரிசோதனைக் குழுக்களை உடனடியாக அனுப்பி அதன் விபரங்களை அறிக்கை வடிவில் தருமாறு அரசாங்க அதிபர் கே. சண்முகநாதனை யாழ். பா. உ. கே. வி. குகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இடம்பெயர்ந்தோருக்காக வைக்கப்பட்டிருந்த மேற்படி அரிசி புழுக்கள், வண்டுகள் கொண்டதாகவும் காலங்கடந்ததாகவும் இருந்ததெனக் கண்டறியப்பட்டதனை அடுத்து இது பற்றிய பூரண விசாரணைக்கு அரசாங்க அதிபர் உத்தரவுபிறப்பித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வரிசி இடம் பெயர்ந்தோருக்கு விநியோகிக்கப்பட்டிருந்தால் ஏராளமானோர் சுகவீன நிலைக்குள்ளாக வேண்டிய அபாயம் ஏற்பட்டிருக்கும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## யாழ் ஆயர் பரு. விஜயம்

(செம்பியன்பற்று)

நேற்றைய தினம் யாழ் ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் அடிகளார் பருத்தித்துறை பங்கிற்கு விஜயம் மேற்கொண்டார்.

தும்பளை தொம்மையப்பர் ஆலயத்தில் திருப்பலி பூஜை மேற்கொண்ட ஆயர், அங்குள்ள ஒவ்வொரு தொகுதி மக்களுடனும் கலந்துரையாடி அப்பங்கு மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். (உ-42)

## 400 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றசிற்றிஓவ்றிங்கோபிரயாணிகள் கப்பலில் பயணம் செய்வதற்கான கட்டணம் 400 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது. (உ)

## படைவீரர் காலிழப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைஇராணுவ முகாமைச் சேர்ந்த படைவீரர் வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கிகால் ஒன்றை இழந்துள்ளார்.

சனிக்கிழமைமு.ப 10மணியளவில் வாழைசசேனை கல்குடா இராணுவமுகாமில் இருந்து வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படைவீரரே காலை இழந்தவராவார். (உ-60)

## தொடரும் கட்டட வேலைகள்

(மந்திகை)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை, அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டட வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இக் கட்டட வேலைகளை வைத்தியசாலை கட்டிடப் பகுதியினரும் எம். எஸ். எவ் நிறுவனமும் இணைந்து அமைத்துவருகின்றனர்.

இவ் வருடமுற்பகுதியில் சிறிய அறையில் ஆரம்பிக்கப்பட்ட அதிதீவிரசிகிச்சைப் பிரிவு, போதிய உபகரண வசதிளோக, நிபுணத்துவம் வாய்ந்த வைத்திய நிபுணர்களோ இல்லாமல் இயங்கி வந்தது.

தற்பொழுது கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதனால் இக் குறைபாடுகள் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-23)

## தொலை பேசிகள் இயங்குகின்றன

(மட்டக்களப்பு)

காத்தான்குடி நகரசபைப் பிரிவில், கடந்த புதனன்று செய லிழந்திருந்த தொலைபேசிகள் மீண்டும் இயங்க ஆரபித்துள்ளன.

காத்தான்குடி ரெலிகொம் கபினட் கடந்த திங்களன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டதையடுத்து 518 தொலை பேசிகள் கடந்த 5 தினங்களாகச் செயலிழந்திருந்தமை தெரிந்ததே ரெலிகொம் ஊழியர்களின் பெரும் முயற்சியால் இவை மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளன. (9-0)

## அன்பளிப்பு

(நல்லூர்)

''உழவு இயந்திரத்தில் இணைக்கும் பெட்டி, தண்ணீர் விநியோகத் தாங்கி, கழிவகற்றும் இயந்திரம்'' என்பன, ஐக்கிய நாடுகள் அபிவிருத்திநிறுவனத்தினால், (யு. என். டி. பி) நல்லூர்ப் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (உ-103)

## தலைமைத்துவ தகமைப்பயிற்சி

(நெடுந்தீவு)

வடக்கு- கிழக்கு மாகாண அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு உதவிஅரசாங்க அதிபர் பிரிவினால் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு தலைமைத்துவ தகமைப் பயிற்சி நடத்தப்பட்டது.

இப் பயிற்சியில் கிராம அபிவிருத்திச் சங்கத்தை சேர்ந்த பதினைந்துபேரும், மாதர் அபிவிருத்தி சங்கத்தைச்சேர்ந்த பதினைந்து பேரும் பங்குபற்றினார்கள். (செ-82)

## கொடும்பாவி எரிப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் ஐயனார்கோவிலடிப் பகுதி மக்களும் நீலியப்பணைப் பகுதி மக்களும்ஒன்றிணைந்து அண்மையில்மழை வேண்டி கொடும்பாவி ஒன்றினை எரித்தனர்.

இக் கொடும்பாவி எரிப்பு நிகழ்வு சம்பந்தப்பட்ட பகுதி விவசாய சம்மேளனத் தலைவர்களின் ஏற்பாட்டின் கீழ் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-25)

## சமுர்த்தி செயலணி அங்குரார்ப்பணம்

(அச்சுவேலி)

பத்தமேனி கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான சமுர்த்தி செயலணி செயற்குழு அமைக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உ. பகீரதன் தெரிவித்துள்ளார். (செ-14)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

### போர் புரிந்த வண்ணம் சமாதானம் என்பது

# இலங்கை அரசின் முரண்பட்ட போக்கை துலாம்பரமாக வெளிக்காட்டுகிறது

## விடுதலைப் புலிகள் அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போர் புரிந்த வண்ணம் சமாதானம் செய்வது என்ற இலங்கை அரசாங்கத்தின் முரண்பட்ட கொள்கையானது ஒருபுறம் சிங்களபௌத்த பேரினவாதிகளை திருப்திப் படுத்துவதோடு, மறு புறம் அனைத்துலக சமூகத்திற்கும் சமாதான முகத்தைக் காட்டும் ஏமாற்றுவித்தையாகவும் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் வன்னியிலிருந்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பேச்சுவார்த்தைக்கு முன்னர் போர் நெருக்கடி தணிக்கப்படவேண்டும் என, விடுதலைப் புலிகள் விடுத்தகோரிக்கையை சிறீலங்கா அரசு நிராகரித்தமையையிட்டு கவலையையும்ஏமாற்றத்தையும்தெரிவித்திருக்கின்றது.

அத்தோடு போரும் வன்முறையும் பகைமையும் தாண்டவமாடும் புறநிலையில்உண்மையான சமாதானப் பேச்சுக்களை நடத்துவது சாத்தியமில்லை என்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளது இராணுவக் கடும்போக்கைக்கைவிட்டு சமாதான நல்லெண்ண சூழலில் பேச்சுக்கள் மூலம் பிரச்சினையைத் தீர்க்கமுயல வேண்டுமென அனைத்துலக சமூகம் சிறீலங்கா அரசை வற்புறுத்த வேண்டும் எனவும்விடுதலைப் புலிகளின் அறிக்கையில் கோரப் பட்டுள்ளது.

இத்திட்டமானது இலங்கைக்கு பேரழவையும்தமிழ் மக்களுக்கு பெரும்துயரையும் ஏற்படுத்தியது.

போரும் சமாதானமும் ஒன்றோடு ஒன்றுஒத்திசைவுகாண முடியாதஇரு முரண்பட்டசக்திகள்.போரைத் தொடர்ந்த வண்ணம் சமாதானத்தை எட்டுவது முடியாத காரியம்.

நிலையான உறுதியான போர் நிறுத்தம் செய்யாமல் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்துள்ளமை எமது போராட்ட வரலாற்றில் நிகழ்ந்துள்ளன. இப்படியான சூழ்நிலையில்போரைமுனைப்புடன் தொடர்ந்தவண்ணம் பேச்சுக்களைநடத்தலாமென கதிர்காமர் கூறியிருப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

கடந்த கால துன்பியல் வரலாற்று உண்மைகள் பற்றி கதிர்காமருக்கு புரியாது.ஒரு கொடுமையான போரின் கடுமையானவிளைவுகள் சமாதானப் பேச்சுக்களுக்கு சாவுமணி அடிக்கலாம் என்பதும்அவருக்குத் தெரியாது.

போர் ஓய்ந்தசூழ் நிலையில் ஒரு நல்லெண்ணப் புறநிலையில் பேச்சுக்கள் நடைபெற வேண்டும். என்று தெரிவித்திருந்த நியாயமான நடைமுறைச் சாத்தியமான கருத்தை ஸ்ரீலங்கா அரசுதிரிபுபடுத்தியிருக்கின்றது என அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.அதனை ஒருமுன் நிபந்தனையாக ஸ்ரீலங்கா அரசு வியாக்கியானம் செய்திருக்கின்றது எனவும் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உணவு மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய பாவனைப்பொருட்கள் மீதுசிங்கள அரசு தடைவிதித்திருப்பதால் தமிழ் மக்கள் குறிப்பாக வன்னியில் வாழும் மக்கள்தாங்க முடியாதஅவலங்களுக்குஆளாகியிருக்கின்றார்கள.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்கும் ஒரு ஆக்கபூர்வமான சமிக்ஞையாக இந்த அரசாங்கம் வன்னி மக்கள் மீதுஇழைக்கப்பட்டு வரும் இந் நடவடிக்கையைநீக்கிவிட அரசு முன்வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் தலைவரின் வேண்டுகோளுக்கு சந்திரிகா அரசு காலம் தாழ்த்தியே பதில் அளித்துள்ளது.

அந்த பதில் அறிக்கையில் முரண்பாடுகளுடமுன் நிபந்தனைகளும் உள்ளன.

★ ஒரு குறிப்பிட்ட குறுகிய காலவரம்பிற்குள் பேச்சுக்கள் நடைபெறவேண்டுமென்பது எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத முன்நிபந்தனை ஆகும்.

போர் நெருக்கடித் தணிப்பிற்கான அந்த யோசனையை நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை ஸ்ரீலங்கா அரசு விதித்துள்ளது

இது சமாதான முயற்சியை முறியடிக்க ஸ்ரீலங்கா அரசு முனைகின்றது என்று தான் கூறவேண்டும்

நோர்வேஅரசுமுன்மொழிந்திருக்கும் சில ஆக்கபூர்வமான கோரிக்கைகளை வரவேற்கின்றோம்.

முதலில் ஸ்ரீலங்கா அரசுநல்லெண்ண நடவடிக்கையாக மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகள் நீக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படிவெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 161647 ஏ | 161647 பி |
| 161647 சி | 161743 ஏ |
| 164064 ஏ | 164274 ஏ |
| 166517 ஏ | 166733 ஏ |
| 166733 பி | 166848 ஏ |
| 166848 பி | 166848 சி |
| 170007 ஏ | 170131 ஏ |
| 170132 ஏ | 170132 பி |
| 170325 ஏ | 170325 பி |
| 170397 ஏ | 172837 ஏ |
| 173169 ஏ | 173171 ஏ |
| 173172 ஏ | 173173 ஏ |
| 173177 ஏ | 174715 ஏ |
| 174715 பி | 174715 சி |
| 175157 ஏ | 175165 ஏ |
| 175165 பி | 175165 சி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 145519 ஏ | 145519 பி |
| 145519 சி | 153514 ஏ |
| 153514 பி | 156934 ஏ |
| 162605 ஏ | 162605 பி |
| 163671 ஏ | 63671 பி |
| 163675 ஏ | 163676 ஏ |
| 163676 பி | 163676 சி |
| 163676 டி | 163838 ஏ |
| 163838 பி | 168238 ஏ |
| 168194 ஏ | 168239 ஏ |
| 168238 பி | 168239 சி |
| 168239 பி | 168251 ஏ |
| 168246 ஏ | 168306 சி |
| 168251 பி | 168307 பி |
| 168307 ஏ | 168324 பி |
| 168324 ஏ | 168331 ஏ |
| 168330 ஏ | 168388 ஏ |
| 168360 ஏ | 168423 ஏ |
| 168388 பி | 173212 ஏ |
| 169194 பி | 173212 சி |
| 173212 பி | 1.73212 ஈ |
| 173212 டி | 173232 பி |
| 173232 ஏ | 173254 பி |
| 173254 ஏ | 173258 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 158533 ஏ | 158533 பி |
| 169393 ஏ | 169393 பி |
| 169404 ஏ | 170318 ஏ |
| 170319 ஏ | 172896 ஏ |
| 272896 பி | 172896 சி |
| 172896 டி | 172896 ஈ |
| 172896 எவ் | 172896 ஜி |
| 172979 ஏ | 172980 ஏ |
| 173056 ஏ | 172980 பி |
| 173099 ஏ | 173056 பி |
| 174718 பி | 174718 ஏ |
| 174718 டி | 174718 சி |
| 175163 ஏ | 175137 ஏ |
| 175163 சி | 175163 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 163966 ஏ | 163966 பி |
| 163966 சி | 164351 ஏ |
| 165449 ஏ | 165449 பி |
| 165542 ஏ | 165542 பி |
| 165700 ஏ | 166766 ஏ |
| 166922 ஏ | 169429 ஏ |
| 169429 பி | 169429 சி |
| 170017 ஏ | 170017 பி |
| 170076 ஏ | 170083 ஏ |
| 171087 ஏ | 170087 பி |
| 170087 சி | 170087 டி |
| 170220 ஏ | 170220 பி |
| 170220 சி | 170220 டி |
| 170222 ஏ | 170222 பி |
| 170222 சி | 172819 ஏ |
| 172819 பி | 172821 ஏ |
| 172822 ஏ | 172976 ஏ |
| 172992 ஏ | 173058 ஏ |
| 173058 பி | 173058 சி |
| 173059 ஏ | 173059 பி |
| 173078 ஏ | 173078 பி |
| 173078 சி | 173078 டி |
| 173170 ஏ | 175152 ஏ |
| 175152 பி | 175152 சி |
| 175164 ஏ | 175164 பி |
| 175194 ஏ | |

### மாநகர சபைக் கூட்டம்

(தென்மராட்சி)

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் மாதாந்தக்கூட்டம்பிரதி முதல்வர் ந.ரவிராஜ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அடுத்த ஆண்டிற்கான அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆண்டிற்கான இறுதிக் கூட்டம் இதுவென்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-77)

### தேருநர் பதிவினை நீடிக்குக

(கல்வியங்காடு)

வாக்காளர்கள் பதிவு செய்வதற்கான கால எல்லையை நீடிக்குமாறு இடம் பெயர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கான இறுதித்திகதி இம்மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதிலும், பல்வேறு இடைஞ்சல் காரணமாக தம்மால் உரிய காலத்தில் பதிவுகளை மேற்கொள்ள இயலவில்லை எனவும் தமது பதிவுகளை மேற்கொள்வதற்கு வசதியாக திகதி நீடிப்பை செய்யுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் [உ-54]

### திருத்தமில்லா வீதி

(இணுவில்)

இணுவில் கிழககு பாடசாலை வீதி,நீண்ட காலமாக திருத்தம் இன்றிக் காணப்படுகிறது. (உ-49)

### டெங்கு விழிப்பு பிரசுரம்

(நல்லூர்)

'டெங்கு' காய்ச்சல் தொடர்பான பிரசுரம் ஒன்றை, யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின், சமுதாய மருத்துவத்துறையின் சுகாதாரக் கல்விசார் பொருட்களை தயாரிப்பு அலகு வெளியிட்டுள்ளது. (உ-103)

### பாவனையாளர் ஏமாற்றம்

(கல்வியங்காடு)

புதிய மின்மானி பொருத்துவதற்கான கட்டணத் தொகையை இலங்கை மின்சார சபைக்கு செலுத்தி நீண்ட நாட்களாகியும் இன்னமும் மின்மானி பொருத்தப்படவில்லை என கட்டணம் செலுத்தியபொதுமக்கள்பலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மின்மானி பொருத்தப்படாமையினால் தமது பாவனைக்கும் அதிகமான மின்கட்டணத்தை செலுத்த வேண்டியிருப்பதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (உ-54(

### கிளைக்குழு தேர்தல்

(கோப்பாய்)

வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின்(நீர்வேலி)சங்க கிளைக் குழுக்களுக்கான தேர்தலை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 24 ஆம்திகதி நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இம்முறை இக்கூட்டங்கள் சங்கத்தின் கிளைகளில் நடைபெறமாட்டாது எனவும் புதிய நடைமுறையின் பிரகாரம் கிளைக்கு அண்மையிலுள்ள பொது இடங்களிலும் அல்லது பாடசாலைகளிலும் சம்பந்தப்பட்ட கிளையின் அங்கத்தவர்களை நேரடியாகத் தேர்தலை நடத்தும் வகையில் ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (க-79)

## சங்கேமுழங்கு

### வேளை அறிந்த செயல்

துர்க்காபுரத்தில் 'சைவத்தமிழ் ஆய்வகம்' ஒன்றினை ஏற்படுத்துவதான செய்தியறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். புராதனப் பொக்கிஷங்கள் யாவும், காப்பகங்கள இன்றி ஆதரவு வேண்டி நிற்கும் இவ்வேளையில், சைவம், தமிழ் சார்ந்த அனைத்து அம்சங்களையும் உள் வாங்கி நிற்கும் ஒரு கலைப் பெட்டகம் அமைக்கப் படுவதான செய்தி, ஆரோக்கியம் தருவதாகும

சிவத்தமிழ் நூல்களோடு, நுண்கலைகள் சுவடுகள், ஏடுகள், முத்திரைகள், சின்னங்கள், அறிஞர்கள், கலைஞர்கள், புலவர்கள், இசைக்கருவிகள்,வாகனங், கல்சிற்பங்கள்,ஓவியங்கள், மகிமை தரும், மண், பல்லக்கு, நாணயங்கள் இதுபோன்ற இன்னோரன்ன பல அம்சங்களையும் தாங்கி நிற்கும் ஒரு ஆய்வகமாக மிளிர வேண்டுமென்று நிகழ்காலம் வேண்டிக் கொள்கிறது நல்லதொரு முயற்சி என்பதால் இந்தமண் நிச்சயம் வரவேற்றுச் சிறப்பிக்கும்.

அளவையூர் கே. எஸ். சிவஞானராஜா

### பயணச்சீட்டுபெறுவதிலும் செல்வாக்கு தேவையா?

**பயணி ஒருவரின் ஆதங்கம் இது**

சந்திர மண்டலம் சென்று விடுமுறையை சந்தோசமாய் கழித்து வரலாம்.

சூரியனை அணுகி சுகநலன் விசாரித்து வரலாம்

ஆனால் எங்களுடைய நாட்டின் தலை நகருக்கு சென்றுவருவதென்றால்...

அதிலும் எங்களைப் போன்ற ஏழைகளும்,ஆளுதவியற்றவர்களுமானால் நினைத்துப் பார்க்கவே தேவையில்லை.

கப்பல் மற்றும் விமான மூலம் யாழ் குடாநாட்டை கடப்பதற்கு மக்கள் அனுபவித்துவரும் துன்ப,துயரங்களைத்தான் நான் சொல்லவருகிறேன்.

உணவை விடுத்து, தூக்கம் மறந்து பயண அனுமதிக்காக நாம் அலையும் அலைச்சலை அந்தபரமாத்மா ஒருவரே அறிவார்.

இப்படியிருக்கையில், ஒருசாரார் எதுவித தடைகளும் இன்றி, எம்மில் இருந்து எவ்வளவோ நாட்பிந்தி பயண அனுமதிக்காய் விண்ணப்பித்தவர்கள் கூட, வெகுசுலபமாய் எம்மை முந்திக்கொண்டு பயண அனுமதி பெற்றுச் செல்கின்ற போது எம் மனம்படும் பாட்டை கேட்டறிய யாருள்ளார்?

செல்வாக்கு மிக்கவர்களின் இந்தச் செல்லாத்தனத்தின் முன் எங்களைப் போன்றோரின் சொல்வாக்கு எடுபட நியாயம் இல்லைத்தான்.

கல்லில் நார் உரித்து ஒருவாறு பயண அனுமதி கிடைத்தாலும், பயண தினத்தன்று எம்மை ஏற்றிச் செல்லும் வாகனத்தில் ஏறி அமர்வதிலும் சின்னத்தனம் புரிபவரின் அட்டூழியங்கள் சொல்லிமாளா.

இப்படி எத்தனையோ தடைதாண்டல் பரீட்சைகளைத்தாண்டி பயணம் மேற்கொள்ளும் எம் போன்றவர்களின் அவல நிலை,அந்த ஆண்டவனே கீழிறங்கி வந்தாலும்,நம்மை ஆழ்பவர்களின் அடிவருடிகள் இருக்குமட்டும் தீராது.

பாதிக்கப்பட்ட
புங்குடுதீவு வாசி

# மத்தியஸ்தம் செய்யும் அதிகாரம் நோர்வேக்கு இல்லை
# இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர
# அரசமைப்பு திருத்த சட்டமே தீர்வாகும்!

## டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு கதிர்காமர் பேட்டி

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர் திருத்த சட்டமே தீர்வு என்று நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கூற இருக்கின்றோம் முன்பு திருத்தசட்டம் பாராளு மன்றில் சமர்பித்த போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைபெறாததால் அது தோல்வி கண்டது.

மீண்டும் வாய்ப்பான சூழ்நிலை வரும் போது அதனை சமர்ப்பிக்க வேண்டுமென்பதில் ஜனாதிபதி கருத்துடன் இருக்கிறார்.

இவ்வாறு வெளியுறவு அமைச்சர்கதிர்காமர் டெய்லி நியூஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

பேட்டியின் போது பிரிட்டனில் புலிகளை தடை செய்வது தொடர்பாக, அன்ரன் பாலசிங்கத்தின் கூற்றுப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்று பத்திரிகையாளர் கேட்டதற்கு.

அது மிகவும் இறுமாப்பான பதில் பயங்கரவாதியால் அதே பாணியிலான பதிலாக இருக்கிறது என்றுகூறினார்.

விடுதலைப் புலிகளை அமெரிக்கா தடைசெய்த பின்பு ஏனைய நாடுகளும் அதனைப் பின் பற்றி புலிகளைத் தடை செய்யுமென எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. சர்வதேசப் பயங்கர வாதம் என்பது புதியதொரு விடயம் இதனைத் தடை செய்வதற்கான சட்டங்கள் பல நாடுகளில் இல்லை. அதுவே காரணமாகும்.

முடிவுகள் பற்றிவரையறையொன்றில்லாத பேச்சுக்கள் புலிகளுக்கு வாய்ப்பானவை. இதனால் பேச்சுவார்த்தைக்கான உரிய வரையறையொன்று தேவை. அதனைப் பேச்சுக்கள் ஆரம்பித்தது வலியுறுத்தவுள்ளோம்.

இன்றைய நிலையில் நோர்வே என்ன செய்து கொண்டிருக்கிறது. என்ற கேள்விக்கு பதிலளித்த கதிர்காமர்.

புலிகள் எமக்கு தெரிவிக்க விரும்பியவற்றை நோர்வே எம்மிடம் நேரடியாக தெரிவிக்கிறது. நாம் தெரிவிக்க விரும்பியவற்றையும் கேட்டறிந்து கொள்கிறார்கள்.

அவர்கள்மிகவும் பயனுள்ள பணியை ஆற்றுகிறார்கள். ஆனால் மத்தியஸ்தம்செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இல்லையென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ

## செய்தித் துளிகள்

### ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குரு பீடத்தின் தலைவரும்; சவரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதியுமான ஸ்ரீஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஆன்மீக அருளுரைகளை நடத்திவிட்டு கடந்த 10 ஆம்திகதி யன்று நாடு திருப்பியுள்ளார். (உ)

### சந்தை இடமாற்றம்

(நல்லூர்)

யாழ். காங்கேசன்துறை வீதியில், குளப்பிட்டிச் சந்திக்குச் சமீபமாக, ''கொக்குவில் சந்தையை இடமாற்றம்'' செய்வதற்கான நடவடிக்கைகளை நல்லூர்ப் பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை காலமும் இந்தச் சந்தை கொக்குவில் சந்திப் பகுதியில் 'ஆடியபாத வீதியில் இயங்கி வந்தது.

இடநெருக்கடியை நீக்கிப் பொது மக்களுக்கு வசதியை ஏற்படுத்துவதற்காகவே இடமாற்றம் செய்யப்படவுள்ளது. (103)

### பிள்ளையார் பெருங்கதை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு நெழுவினிப் பிள்ளையார் ஆலயம தற்பொழுது திறக்கப்பட்டு பிள்ளையார் பெருங்கதை இடம் பெற்றுவருகின்றது. (செ-82)

### பஸ் மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்புபிள்ளையாரடியில் கடந்த6ந்திகதி கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகி வாவிக்குள் தூக்கி வீசப்பட்டிருந்த பயணிகள் பஸ் வண்டி வாவியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு டிப்போவுக்கு சொந்தமான இவ்பஸ் வண்டி ஐந்து நாட்களாக கடும் பிரயத்தனத்துடன் மேற்கொண்ட முயற்சியினாலேயே மீட்கப்பட்டுள்ளது. (இ-108)

### கூட்டுப் பிரார்த்தனை

(நல்லூர்)

தவிர்க்கமுடியாதகாரணத்தினால் தடைப்பட்டிருந்த கூட்டுப்பிரார்த்தனை தற்பொழுது மீண்டும், ஊரெழு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தில், பஜனைக்குழுவினரால் ஆரம்பித்து நடத்தப்பட்டுவருகிறது. [உ-103]

### இடம் மாற்றம்

(நல்லூர்)

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து ஆனைக்கோட்டைப் பகுதிக்குச் செல்லும் வீதிப்பகுதியில் முன்னர் இயங்கிவந்த ஆயுர்வேதவைத்திய நிலையம், தற்போது அதே வீதியில் வசதியான கட்டடம் ஒன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் அதிக அளவில் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-103)

### பழைமை வாய்ந்த கட்டடம்

(கல்வயல்)

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தின் கட்டடங்கள் பலவற்றின் சுவர் மிகவும்சேதமடைந்து காணப்படுகின்றன.

இக்கட்டடத்தை திருத்தம் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து வெகு விரைவில் அவை இடிந்து விழும் நிலை ஏற்படலாம் எனவும் நம்பப்படுகிறது. (உ-111)

### கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்),

நல்லூர்ஜமுனா ஏரியில் உள்ள செட்டியார்தோட்டப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று விற்பனை செய்யப்படுவதாக தெரியவந்துள்ளது.

இவ் உற்பத்தியை அருந்துவதில் இளைஞர் மட்டத்தினரும் அதிக நாட்டம் காட்டிவருவதாகவும், இதனைத் தடுப்பதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். [உ-2]

### பொதுசந்தைக்கு புதிய கட்டடம

(மந்திகை)

நெல்லியடி பொதுச்சந்தை யாழ். வீதியில் அமைந்துள்ள மொடேன் கல்வி நிலையத்திற்கு அருகில் இடமாற்றப்பட்டு நவீனமயப்படுத்தப் படவிருப்பதாக ஈ.பி.டி.பி. யின் நெல்லியடிப் பகுதி அமைப்பாளர் வல்லிபுரம் நடராசா தெரிவித்துள்ளார்.

இதற்கென 20 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது இயங்கும் சந்தைப் பகுதியில் நிலவும் இடநெருக்கடியைக் கருத்திற்கொண்டே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-23-41)

## வட-பிராந்திய போ. சபையில்
# ஒப்பந்தத்தில் கடமையாற்றியோர் அமைய அடிப்படையில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையில் ஒப்பந்த அடிப்படையில் பஸ் சாரதிகளாகவும், காப்பாளர்களாகவும் கடமையாற்றியபலருக்கு அமைய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம்முதலாம்திகதியில் இருந்து இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய வடபிராந்திய போக்கு வரத்து சபை அதிகாரி ஒருவர் இந்நியமனங்கள் தொடர்பான ஆவணங்களை எடுத்துவந்துள்ளார்.

அமைய நியமனம் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

யாழ். சாலை சாரதிகளாக கே. சிவராசா, சி. இராசரத்தினம், ஐ. குமாரலிங்கம், என். சிவஞானலிங்கம், என். அரியதாஸ், வி. வில்வமூர்த்தி, ரி சச்சிதானந்தமூர்த்தி, எஸ். தயானந்தன், கே. செல்வராசா, கே. கனகரெத்தினம், எஸ். செல்வரத்தினம், ஆர். ஜெகதீஸ்வரன், எஸ். குணபாதம், கே. அமிர்தலிங்கம், டி. தேவநேசன், ஆர். பாலசுப்பிரமணியம், ஆர். யோகராசா, ரி. பூரணலிங்கம், எஸ். பரமசாமி, எம். சிவசுப்பிரமணியம், எம். ஸ்ரீதர், வி. புண்ணியமூர்த்தி, கே. சிவபாலன், எஸ். சந்திரகாந்தன் ஆகியோரும்.

யாழ். சாலை காப்பாளர்கள் மற்றும் ஏனைய பதவிகளுக்கு எஸ் சக்திவடிவேல், எஸ். சிவகுமார், எஸ். இராமச்சந்திரன், எஸ். பொன் சத்தியலிங்கம், கே.யோகேஸ்வரன், எஸ். முருகதாஸ், எஸ். குசந்தன், எஸ். உதயகுமார். கே. பிரபாகரன்' எம். செல்வநாயகம் கே. குணராஜா, வி. சுதர்சன், செ. கணேசமூர்த்தி, ரி. சுகந்தன், எம். பாலகிருஷ்ணவரன், ஏ. அச்சுதன், எல். மயூரன், ஆகியோரும்,

பருத்தித்துறைச்சாலை காப்பாளர்கள், ஏனைய பதவியாளர்களாக,

எஸ். சிவகுமாரன், எஸ். பாஸ்கரன், எஸ். கனகசலிங்கம், எஸ். கணேஸ்வரன், பி குகதாஸன், எஸ். கந்தசாமி, ரி. வேலுப்பிள்ளை, எஸ். ரட்ணசிங்கம், ரி. பரமேஸ்வரன், எஸ். கலகபதி, எஸ் சிவராஜ், ஜெ. ஜெயநந்தன், கே. தேவிகாந்தன், சி. சாந்தகுமார் ஆகியோரும்.

பருத்தித்துறை சாலை சாரதிகளாக,

வி.வீரகுமார், எஸ்.கிருஸ்ண பிள்ளை, கே. விக்னேஸ்வரன், பி. சிறிராஜன் ஆகியோரும்.

காரைநகர் சாலை சாரதி மற்றும் காப்பாளர்களாக,

ரி. முரளிசங்கர், எஸ். பிரதீபன், எஸ். சி. நிர்மலராஜ், சி. சுந்தேஸ்வரன் ஆகியோரும் நியமிக்கப்படவுள்ளனர். (உ-12)

### தலைவர் பதவி வெற்றிடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபைத்தலைவருக்கான பதவி கடந்த இரு மாதங்களங்கள் வெற்றிடமாகக் காணப்படுகிறது.

முன்னர் தலைவராக பதவி வகித்து வந்த என். மதனராஜா ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதையடுத்தே இவ் வெற்றிடம் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

### தலைவராக தமிழர்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனமாக முன்னர்இயங்கிய வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயன நிறுவனத்தின் தலைவராக பொ. தியாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம், வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி சந்திரிகா பண்டரநாயக்காவால் வழங்கப்பட்டுள்ளது.

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் தொழில் முகாமையாளராக பதவியில் இருக்கும் இவர் பேராதனை பல்கலைக்கழக இரசாயனவியல் சிறப்புப் பட்டதாரியும் லண்டன் சர்வகலாசாலை இரசாயனவியல் தொழில் நுட்பத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவருமாவார்.

கடந்த 30 வருடங்களுக்குப் பின் தமிழர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நட்டஈட்டுப் படிவம்
# மீளாய்வுப் பணிகள் இன்றுமுதல் ஆரம்பம்
## செயலர் தெரிவிப்பு

(மந்திகை)

நட்டஈட்டுபடிவம்மீளாய்வு செய்யும்பணிகள் இன்றுமுதல் மேற்கொள்ளப்படும் என சாவகச்சேரி வணிகர்மன்ற செயலாளர் தெரிவித்துள்ளார்.

நெல்லியடியில் உள்ள கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள மேற்படி பணிமனையில் படிவம் மீளாய்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

தினமும் 50 அங்கத்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்றும் இது விடயத்தில் பாரபட்சம் காட்டப்படமாட்டாது எனவும் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி இராணுவ நடவடிக்கையின் போது சாவகச்சேரிப் பகுதியில் பெருமளவு வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப் பட்டதையடுத்து நட்ட ஈட்டிற்காக விண்ணப்பிக்குமாறு வர்த்தகர்களை மேற்படி சங்கம் கேட்டுக்கொண்டதும் தெரிந்ததே. (க-23)

### மின் விநியோகம் விஸ்தரிப்பு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பகுதிக்கான மின் விநியோகத்தை விஸ்தரிக்கும் வகையில் அப்பகுதிக்கு, இலங்கை மின்சார சபையினரால் மின் கம்பங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. (உ-75)

### வீதி திருத்தப்பட்டது

(கல்வயல்)

சரசாலை பருத்தித்துறை வீதி, மந்திகை வைத்தியசாலை வரை திருத்தம் செய்யப்பட்டு தார் ஊற்றப்பட்டுள்ளது.

இதனால், மந்திகை வைத்தியசாலை நாடிச் செல்வோர் மற்றும் துன்னாலை காசிநாதர் வித்தியாசாலை செல்லும் மாணவர்கள் பெரும் நன்மையடைந்துள்ளனர். (உ-111)

## இன்று ஒரு தகவல்

# இரும்பு மனிதன் பெரும தலைவன்

ரஷ்யா ஒரு பெரிய நாடு. அது பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது அவற்றுள் ஒன்றுக்கு ஜியார் ஜியா என்று பெயர். ஜியார் ஜியாவின் காக்கஸ் பிரதேசத்தில் கோரி என்ற கிராமத்தில் செருப்புத் தைத்து வயிறு வளர்க்கும் ஒரு ஏழை மனிதனுக்கு ஒரு மகன்இருந்தான். அவன் மகா துஷ்டன். எதற்கும் பயப்படாதவன். அவனுடைய துஷ்டத் தனத்தினால் கிராமத்திலுள்ளவர்கள் அவனை வெறுத்தனர். அவன் பெரியவனாக வளர்ந்தால், கிராமத்திற்குப் பெருந் தீங்கு வரும் என்றும் அஞ்சினர்.

ஒருநாள் அவன்ஆற்றங்கரையிலிருந்த பழக் கடைக்குச் சென்றான். பழம் வாங்குவது போல அவ்விடத்தில் உலாவினான். திடீரென்றுஒரு பழக் கூடையைத்திருடிக் கொண்டு ஓட்டம்பிடித்த அவன்பிடிபடவில்லை. ஆற்றைக் கடந்து மறு கரையை அடைந்தான். திருடியதைக் கொண்டு ஓடியதுமல்லாமல் பழச் சொந்தக்காரனைக் கேலி செய்து அவமதித்தான்.

அவனுக்கு முரட்டுத்தனமான விளையாட்டுகளே பிடிக்கும். நண்பர்களுடன் சேர்ந்து யுத்தம் செய்வதாக விளையாடுவான். இந்தவிளையாட்டு யுத்தத்திலும் வெடி மருந்துகள் உபயோகிக்கப்பட்டன. ஒரு சமயம் வெடி மருந்து பட்டு அயலிலிருந்த வைக்கோற் போர்கள் தீப்பற்றிக்கொண்டன. அவைஎரிந்து சாம்பராகியமையால் கிராம மக்கள் மிகவும்ஆத்திரமடைந்தனர்.

அவனதுதந்தையைஏசினர். மகனைத்திருத்தும் படி வற்புறுத்தினர். அவர் மனம்வருந்தினார். இப்படித்துஷ்டனான அவனை எப்படித் திருத்துவது என்பதுஅறியாதுதிகைத்தார். கடைசியில் மகனை நகரத்தில் பள்ளிக்கூடம் நடத்தி வந்த ஒரு பாதிரியாரிடம் சேர்த்தார். தனது பாரம்நீங்கியதாகத் தந்தை கிராமத்திற்கு மீண்டார். இருப்பினும் பாதிரியாரின் பள்ளிக்கூடத்தில் அவன் என்ன துஷ்டத்தனங்களைச் செய்வானோ என உள்ளூரப்பயந்தார்.

சில நாட்களின் பின் தந்தையார் மீண்டும் பாதிரியாரிடம் வந்தார், பாதிரியாரைச் சந்திக்கவே அவருக்குப் பயமாக விருந்தது. மகனைப் பற்றிப் பல குற்றச் சாட்டுகள் சொல்லப் பாதிரியார் காத்திருப்பார் என்று நினைத்தார். தயக்கத்துடன் பாதிரியாரை அணுகி 'ஐயா! என் மகன் எப்படி இருக்கிறான் என்று கேட்டார். அவருடைய குரல் நடுங்கிற்று.

ஆனால் பாதிரியாரின் முகம் மலர்ந்தது. 'பெரியவரே! உம்முடைய மகன் மகாபுத்திசாலி பாடங்களில் நல்ல கவனம். நன்றாகப் படிக்கிறான்'' என்று பாதிரியார் சொன்னார். தந்தையும் அகமகிழ்ந்தார். பிற்காலத்தில் அவன் வேறோர் காரணத்திற்காக அப்பாடசாலையிலிருந்து விரட்டப்பட்டான்.

ரஷ்யா நாட்டில் பொதுவுடமை அரசாங்கம் நடைபெற்றது. அந்தச் சமதர்ம ஆட்சியை நிறுவப்பாடுபட்ட தலைவர்களுள் ஒருவர் ஸ்டாலின், சுமார் முப்பது ஆண்டுகளாக அவர் ரஷ்யா நாட்டின் தன்னிகரற்ற பெரும் தலைவராக விளங்கினார். இரண்டாவது உலகப் போரிலேரஷ்யாதேசத்திற்குப் பெரும் வெற்றியீட்டிக் கொடுத்த தலைவர், ஸ்டாலின் என்றால் இரும்பு மனிதன் என்று அர்த்தம். அவர் யோஸப் ஜுகாஸ்வில்லி என்ற இயற் பெயருடன் சிறுவனாக வாழ்ந்த போதுதான் துஷ்டனாக வாழ்ந்தார்.

நன்றி
இளமைப் பருவத்திலே

# பொது மக்களின் 600 பங்கீட்டு அட்டைகள் மோசடி

# கிராம அலுவலர்கள்மீது நடவடிக்கை

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பொது மக்களின் பங்கீட்டு அட்டையில் மோசடி செய்ததாகக் கருதப்படும் கிராம அலுவலர்கள் பலர் வகையாக மாட்டிக் கொண்ட அதிர்ச்சியூட்டும் சம்பவம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் மூலம் மேற்படி பங்கீட்டு அட்டை மோசடி அம்பலத்திற்கு வந்துள்ளதாகவும் சுமார் 600 பங்கீட்டு அட்டைகள் மோசடி விடயத்தில் 5 கிராம அலுவலர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது, மேல் நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு யாழ். அரச அதிபர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளர், 513 வது, 511 வது பிரிகேட் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் வனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து அவர் யாழ்.அரச அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். (க)

## வீதி திருத்தம்

திருநெல்வேலி முடமாவடிப் பகுதியிலிருந்து நல்லூர் நோக்கிச் செல்லும் கோவில் வீதியில் கற்களும், மணலும் பறிக்கப்பட்டு ஆங்காங்கு குவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-103)

## சீரில்லா மின் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

இலங்கை மின்சாரசபையினரால்வேலணைப்பகுதிக்கு வழங்கப்படும் மின்சாரம் மிகவும் ஒளி குன்றியதாக ஒன்றுக்கும் உதவாத நிலையில் இருப்பதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

எனினும் மின்சார பாவனைக்கான கட்டணம் மட்டும் தவறாது செலுத்தவேண்டிய நிலை இருப்பதாகவும் அவர்கள் மன வருத்தத்துடன் தெரிவித்துள்ளனர். (உ-75)

## வருடாந்த இசைவழிபாடு

(மந்திகை)

நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையின் வருடாந்த இசைவழிபாடு இன்று திங்கட்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு அருட்செல்வி ஜெயக்குமாரி ரட்ணசிங்கம் தலைமையில் நடைபெறுகின்றது. [செ-23]

## முள்ளி வரை மட்டுமே நேற்று பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியிலிருந்து கொடிகாமம் வரை தினசரி மேற்கொள்ளப்படும் பஸ்சேவை நேற்று முள்ளிவரை மட்டுமே இடம் பெற்றது.

தென்மராட்சியில் நேற்று மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை அடுத்தே மேற்படி பஸ்சேவை மட்டுப் படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## ஷெல் வீழ்ந்துவெடித்ததில் வயோதிபப்பெண்காயம்

(மந்திகை)

சரசாலை மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஷெல் விழ்ந்து வெடித்ததில் வயோதிபப் பெண் ஒருவர் நெஞ்சில் காயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலுப்பிள்ளை தங்கம் (வயது-80) என்பவரே காயமடைந்த வயோதிபப் பெண் ஆவார்.

அவ்வீட்டில் குடியிருந்த கந்தையா பரிமளம் என்பவர் எதுவித காயமுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

## பிள்ளையார் பெருங்கதை

(நல்லூர்)

யாழ். பலாலி வீதி பல்கலைக்கழகச் சந்திவிநாயகர் ஆலயத்தில் விநாயக விரதத்தை யொட்டித் தினமும், ''பிள்ளையார்பெருங்கதை'' படிக்கப்பட்டு வருகின்றது. (உ-103)

## எச்.என் டி.ஏ பரீட்சை திகதியில் மாற்றம்

(ஏறாவூர்)

கணக்கியல் உயர்தேசிய டிப்ளோமா பயிற்சி நெறி மாணவர்களுக்கான பரீட்சை அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட கால அட்டவணையின் பிரகாரம் இன்று 18ம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைஅடுத்த வருடம் ஜனவரி 2ந் திகதியும் எதிர்வரும் 23ந் திகதி நடைபெறவிருந்த பரீட்சை இம்மாதம் 30ந் திகதியும் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கால அட்டவணை மாற்றம் முதலாம், இரண்டாம் வருட கணக்கியல் டிப்ளோமா மாணவர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும். மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்குரிய பரீட்சை வழமையான கால அட்டவணையின்படியே நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-உ-108)

## கலாசாலை மாணவர் கவலை

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களின் முதலாம் வருட பரீட்சை முடிவுகள் இன்னமும் வெளிவராமை குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் முதலாம்,இரண்டாம் வருட பரீட்சை முடிவுகள்ஏற்கனவே வெளிவந்த போதிலும் பலாலி ஆசிரிய கலாசாலை முதலாம் வருட மாணவர்களின் பரீட்சை முடிவுகள் மாத்திரமே வெளிவந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-42)

## மின்சாரம் வெட்டு பரீட்சை எடுக்கும் மாணவர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

எந்த விதமான முன்னறிவித்தல்களும் இன்றி அடிக்கடி மின்விநியோகம் துண்டிக்கப்படுவதனால் ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரிதும்சிரமத்துக்குள்ளானதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முன்னறிவிப்பு இல்லாத மின்வெட்டு சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டபோது நேற்றிரவிலிருந்து ஒன்று விட்ட ஒருநாளைக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜீ. சி. ஈ. சாதாரண தர பரீட்சை முடியும் வரையில் ஆவது பகலில் மின்விநியோகத்தை நிறுத்தியும் இரவில் பரீட்சை எடுக்கும் மாணவர்களின் நன்மை கருதி மின்சாரத்தை வழங்குமாறும் பெற்றோர்கள் பலர் கோரியுள்ளனர். (வ-110)

## யாழ். குடாநாட்டில் மிதிவெடிகளினால் 112 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

## இணைப்பு அதிகாரி தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்தமூன்று வருட காலத்தில் மிதிவெடிகளினால் மொத்தம் 112 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். என யாழ். அரச செயலகத்தில் இயங்கி வருகின்ற மிதிவெடிகள்அகற்றல் நடவடிக்கைத் திட்டத்தின் இணைப்பதிகாரியான எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; 1998 ஆம் ஆண்டில் 42 பேரும் 1999 ஆம் ஆண்டு 28 பேரும் 2000 ஆம் ஆண்டில் 42 பேருமாக மொத்த 112 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இவர்களுள் பாடசாலை செல்கின்ற மாணவர்கள் ஐந்துபேர் எனவும் ஏனையோர் பலதரப்பட்டவர்களாக இருந்தனர் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வு செயல்பாடுகள் குடாநாட்டில் 92 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதேபோல கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்குமான விழிப்புணர்வு நடவடிக்கைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

தற்போது தொடர்கின்ற யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானக் காற்று வீசும் பட்சத்தில் எமது செயப்பாடுகள் வேகமடையக் கூடும் என்றும், இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க-17-72

## ஏறாவூரில் ஷெல் தாக்குதல் இளம்பெண் துடிதுடித்துப்பலி

(ஏறாவூர்)

ஏறாவூர் நகரிலுள்ள காவலரண் பொலிஸாருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து, பொலிஸாரினால் ஏவப்பட்ட மோட்டார் குண்டொன்றினால் வீட்டின் இளம் சகோதரர்கள் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் காளி கோவில் தோட்டத்தைச் சேர்ந்த கணேசமூர்த்திவசந்தி (வயது-16) என்பவர் வீட்டு முற்றத்தில் மா இடித்துக் கொண்டிருந்த போது குண்டிற்குப் பலியானார்.

இச் சம்பவத்தில் பலியான வசந்தியின் வீட்டுக்குபக்கத்து வீட்டில் வசித்து வந்த வேணு - வயது-22, லோஜிதன் வயது க11, ஆகிய இரு சகோதரர்களும் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து 'வலம்புரி' செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. (வ-108)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியாமுனைப்புடன் செயலாற்றும்

## கதிர்காமரிடம் ஜஸ்வந்சிங் உறுதி

இலங்கைஅரசும்விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் பேச்சுவார்த்தைக்கான அறைகூவல்களை விடுத்திருக்கும் இந்த வேளையில்.

இலங்கையில் நீண்ட காலமாகஇடம்பெற்றுவரும் இனப்போரைமுடிவுக்குக்கொண்டுவரமேற்கொள்ள வேண்டிய சமாதான முயற்சிகள் குறித்து ஆராய அண்மையில் இந்தியாவுக்குச் சென்றவெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இந்தியவெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்கை புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் போது இலங்கை இனப்பிரச்சனைபற்றியும். கைது செய்யப்பட்ட மீனவர் விவகாரம் மற்றும் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடுகடத்துதல் போன்ற விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் விரிவான முறையில் கருத்துக்களை பரிமாறி உள்ளனர்.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் இலங்கை இனப்பிரச்சினைக்குச்சமாதானத் தீர்வினைக் காணவேண்டும் என்பதில் இந்தியா முனைப்புடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடுகடத்தும் விடயத்தில் இந்தியா சமாதானப் பேச்சிற்கு பாதிப்பின்றியஅணுகும்முறையைக்கையாளும் என்றும் இவ்விடயத்தில் இலங்கை தனது கொள்கையைமாற்றிக்கொள்ளவேண்டும் என இந்தியகோரமாட்டாது என்றும் இந்திய வெளிவிவகாரஅமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும்புதுடில்லிக்குச் செல்லும் அமைச்சர் கதிர்காமர் இந்தியப்பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாயையும் சந்தித்துப் பேச உள்ளதாகவும் தெரியவந்துள்ளது: (ந-4)

# வேலை நிறுத்த பளுவை குறைக்க பல அமைப்புக்கள் தயாராகின்றன

(புதுடில்லி).

இந்திய அஞ்சல் ஊழியர்களின் வேலை நிறுத்தப் பளுவை குறைக்க பல அமைப்புகள் உதவுகின்றன,

இந்திய அஞ்சல் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் தபால்கள் மலை போல் ஒவ்வொரு தபாலகங்களிலும் குவிந்து கிடக்கின்றன என்றும் அதேவேளை அவற்றைப் விநியோகம் செய்வதற்கு தேசிய தொண்டர் நிறுவனங்களும் மாணவர் அமைப்புகளும் இதற்குஉதவ முன்வந்துள்ளன.

இதேவேளை புதுடில்லிப் பிரதேசத்தில் வேலை நிறுத்தம் கைவிடப்படுவதாகவும் இதேபோன்று ஜம்முகாஷ்மீரிலும் ஊழியர்கள் வேலைக் குத்திரும்பி விட்டனரென்றும் கூறப்படுகிறது:

இதற்கிடையில் மேற்கு வங்காளம், கேரளா,ஓரிஸா, உத்திரப்பிரதேஷ் போன்ற மாநிலங்களில் தொடர்ந்து வேலை நிறுத்தங்கள் கடைப்பிடிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

# தேர்தலில் விட்டுக்கொடுக்க இஸ்ரேல் பிரதமர் தயார்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் பிரதமர் எகுட் பராக் தேர்தலில் விட்டுக் கொடுக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

அடுத்து இருமாதங்களில் வர இருக்கும் தேர்தலில் இஸ்ரேலின் பிரதமர் பதவிக்கு பலர் போட்டியிட இருப்பதாகவும் இதில் குறிப்பாக முன்னாள் அமைச்சர்கள்பலர் போட்டியிடஇருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் வெளியுறவு அமைச்சரும் பிரதமர் பதவிக்குப் போட்டியிடஇருப்பதாகவும் அவருக்காக தான் பிரதமர் பதவிக்கு போட்டியிடாது விட்டுக் கொடுக்கப் போவதாக அறிவித்தார்.

இதேவேளை , ஒன்றினை இழந்து ஒன்றினைப் பெறத்தான் விரும்பவில்லையென்றும் முன்னாள் வெளியுறவுஅமைச்சர் தெரிவித்தார். (து)

# அமைச்சர் ஜெயக்குமாரை மத்தியஅரசே விசாரிக்கும்

(சென்னை)

மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் ஜெயக்குமார் புலிகளுடன் தொடர்புஎன்றவிடயததை மத்தியஅரசே விசாரிக்கும் என்றார் புதுவைமுதல்வர்.

நிருபர்கள் புதுவை அமைச்சர் கண்ணன் ஜெயக்குமார் பற்றிக் கூறிய கருத்துக்களின் உண்மைகள் இருக்கின்றனவா அப்படியாயின் புலிகளுடன் தொடர்புடைய அமைச்சரை ஏன் தண்டிக்கவில்லை என்றனர்.

இதையடுத்தே விசாரிக்கவோ தண்டிக்கவோ புதுவை மாநிலஅரசுக்கு அதிகாரம் இல்லையென்றும் மத்திய அரசே அதனை கவனிக்க வேண்டும்என்று புதுவை முதல்வர் சண்முகம் தெரிவித்தார். (து)

# இந்தோனேசியாவிற்குஉதவ நாணய நிதியப் பின்னடிப்பு

(ஜகார்த்தா)

சர்வதேச நாணய நிதியம் இந்தோனேசியாவிற்கு நிதி ஒதுக்குவதைத் தாமதித்துள்ளது என்று நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் அரசியல் நெருக்கடிநிலைகளாலும் அரச நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகள் சம்பந்தமாகவும் சர்வதேச நாணய நிதியம் நிதி உதவுவதற்குபின் நிற்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இனிமேல் இந்தோனேசிய அதிபரின் சீர்திருத்தங்களைப் பொறுத்தே சர்வதேச நிதி நிறுவனம் நிதி உதவுமென்றும் தெரியவருகிறது. (து)

# கிணறு துப்பரவுசெய்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(சங்கானை)

கிணறு துப்பரவுசெய்யும் பொழுது வழுக்கி விழுந்ததில் காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானையைச் சேர்ந்த த. வசந்தராசா (வயது-37) என்பவரே காயமடைந்தவராவர். (க-ப-16)

## யுத்தநிறுத்தம் நீடிக்கப்படலாம்

(புதுடில்லி)

றம்ழான் பெருநாளை ஒட்டி இந்திய அரசு அறிவித்திருந்த யுத்த நிறுத்தத்தை மீண்டும் நீடிக்கப்போவதாக உள்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்த நிறுத்தகாலத்தில் பாகிஸ்தான் சமாதானத்துக்கான நல்ல அறிகுறியுள்ள செயல்பாடுகளில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் இதனால் இன்றும் யுத்த நிறுத்தத்தை நீடிக்க இருப்பதாகவும்உள்துறை அமைச்சர் எல்.கே அத்வானி தெரிவித்தார். (து)

## விடைத்தாள் அனுப்பிவைப்பு

(கோப்பாய்)

நடை பெற்றுக் கொண்டிருக்கும் க. பொ.த (சாதாரண) தரபரீட்சையின் ஒரு தொகுதி விடைத்தாள்கள் நேற்று விமானம்மூலம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. (க-79)

## முகாம் அகற்றப்பட்டது

(கல்வயல்)

துன்னாலை கலிகைச் சந்தியில் பலவருடங்களாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் தற்பொழுது அகற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து முகாம் பகுதியில் அமைந்திருந்த வீட்டு உரிமையாளர்கள் தத்தம்வீடுகளைத்துப்பரவுசெய்து மீளக் குடியமரும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (உ-111)

# குமுறிய எரிமலை தணியத்தொடங்கியது

(மொன்சாறி)

மெக்சிக்கோவில் குமுறிய எரிமலை தணியத் தொடங்கியுள்ளது.

கடந்த சில தினங்களாக மெக்சிக்கோமலைபுகைகக்கத் தொடங்கியதுடன் குமுறத் தொடங்கியதாலும் மலை அடிவாரத்தில் இருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டனர்.

கிட்டத்தட்ட பதின்நான்காயிரம் மக்கள்இடம்பெயர்ந்தார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைபுகை கக்குதல் குறைந்து வருவதாகவும்அரசு அவதான நிலையம் எரிமலை கக்கும் அபாயம் நீங்கிவிட்டதாகவும் மக்களை மீண்டும் வந்து குடியமருமாறும் அறிவித்தல் விடப்பட்டுள்ளது. (து)

## உலக நாடுகளில்

# மரண தண்டனை நிறுத்த கோபி அனானிடம் மகஜர்

(வத்திக்கான்)

உலகநாடுகளில் மரணதண்டனையை நிறுத்தும்படி கோரும் மகஜர் ஒன்றை ஐ.நா பொதுச் செயலர் கோபி அனானிடம் கையளித்தனர்.

ரோம் நகரில் இயங்கும் சமாதானக் குழு ஒன்று இந்த மகஜரை கையளித்திருக்கின்றது.

146 நாடுகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட முப்பதுலட்சம் பேரின் கையொப்பங்கள் இந்த மகஜரில் இடம் பெற்றிருப்பதாகத் தெரிகிறது உலகின் புகழ் பெற்றபல அறிஞர்கள்,மரணதண்டனையை எதிர்க்கும் இந்த மகஜரில் கையொப்பம்இட்டிருக்கிறார்கள்.

உலகில் 90க்கும் மேற்பட்ட நாடுகளில் மரணதண்டனை வழங்கும் நடைமுறை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


எம்.இரண்டாயிரம் என்ற இயக்கமும் சர்வதேச மன்னிப்புச்சபையும் இணைந்து இந்த மகஜரை ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலர் கோபி அனானிடம் கையளித்துள்ளனர். (து)

# கறுத்தவருக்கு உயர்பதவி அமெரிக்கஅதிபரின் செயல்

## கறுப்பரை திருப்திப்படுத்தவாம்

(வாஷிங்டன்)

கறுப்பின ஒய்வுபெற்ற உயர் அதிகாரிக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் உயர் பதவிவழங்கினார்.




அமெரிக்க அரசியல் சரித்திரத்திலே முதல்முறையாக கறுப்பருக்கு அரசின் உயர் பீடம் கிடைக்கிறது. இந்தப் பதவியை ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ ஜெனரல் கோலின் யோவல் ஏற்றார்.

ஜெனரல் கோலின் யோவலுக்கு இந்தப் பதவியான அமெரிக்க வெளியுறவுஅமைச்சர் பதவியைக் கொடுத்திருப்பதாக புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட டபிள்யுபுஷ் அவர்கள் பள்ளி நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

ஜெனரல் கோலின் அவர்கள் 1991 ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்கப் படைகளுக்கு மேற்பார்வையாளராக இருந்து வெற்றிகண்டவர்.

இவர் பழுத்த அரசியல் ஞானியும் சிறந்த நிர்வாகியுமாவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# பாராளுமன்ற ஆட்சி பாஹ்ரேனில்உதயம்

(லண்டன்)

பாஹ்ரேனில் தேர்தல் மூலம் பாராளுமன்ற ஆட்சி அமைக்கப்பட இருப்பதாக அந்நாட்டுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த தேசிய தினக் கொண்டாட்டத்தில் பேசும் போது குவைத்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றம் இருக்கிறது. அரபு நாடுகளில் அது ஒன்றுதான் தேர்தல் மூலமாக பாராளுமன்றத்தை அமைக்கிறது.

எங்கள் நாடும் தேர்தல் மூலமாக பாராளுமன்றத்தை அமைக்க இருக்கிறது என்று அந்த விழாவில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; தேர்தல் முறை கொண்டு வரப்படும் என்றுசொல்லமுடியாதென்றும் எப்பொழுது பொருத்தமான காலம் வருமோஅப்பொழுதுநடை முறைக்கு வருமென்றும் அவர் தெரிவித்தார், [து]

# தனியார் சிற்றூர்திகளில் கட்டண வேறுபாடு பொதுமக்கள் திண்டாட்டம்

(கல்வயல்)

தனியார் சிற்றூர்திகளில் ஒவ்வொன்றிலும் ஒரே தூரத்திற்கு வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்படுவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

சிற்றூர்திச் சங்க கடிதத் தலைப்பில் கட்டண விபரம் பொறிக்கப்பட்டு தலைவர் செயலாளர் ஒப்பந்தத்துடன் சிற்றூர்தியில் ஒட்டப்பட்டுள்ளது.

ஆயினும் சில சிற்றூர்தி உரிமையாளர்கள் அதனைக் கிழித்து எறிந்து விட்டு தமது மனம்போன போக்கில் கட்டணங்களை அறவிடுவதுடன்,துவிச்சக்கரவண்டிகளை ஏற்றிச் செல்வதற்கும் ஒரே தூரத்திற்கு வெவ்வேறு கட்டணம் அறவிடப்படுவதாகவும்,இது குறித்து சிற்றூர்திச் சங்கம் கண்காணிப்பாக இருத்தல் வேண்டும் எனவும் பொதுமக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கின்றனர். (செ-111)

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.
- குறள்

# வலம்புரி

## தமிழரைக் கொல்ல நிதி உதவி

இலங்கைக்கு நிதிவழங்கும் நாடுகளின் கூட்டம் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. வளர்முக நாடுகளின் ஏழ்மையைப் போக்கும் பெருநோக்குடன் குறிப்பிட்ட சில நாடுகள் அவற்றுக்கு உதவியை வழங்கி வருகின்றன.

அவ்வாறு உதவியைப் பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கையும் ஒன்று. வழமையாக உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜூன், ஜூலை மாதப் பகுதிகளிலேயே நடைபெறுவது வழக்கம். அக்காலப் பகுதியில் இலங்கையரசாங்கம் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற தொனிப்பட்ட கருத்துக்களை வெளியிடுவதும் வழமை. ஏதோ இனப்பிரச்சினையைத் தீர்ப்பதுபோல் பாசாங்கு செய்து உதவிவழங்கும் நாடுகளிடமிருந்து பெருந்தொகையான உதவியைச் கறந்து விடுவதே அதன் நோக்கமாகும்.

அவ்வாறு பெறப்படும் உதவியில் பெருந்தொகை நாட்டின் அபிவிருத்திப் பணிக்கு செலவிடப்படுகின்றதா என்றால் அதுவுமில்லை. மாறாகத் தமிழினத்திற்கு எதிராக-உள்நாட்டுப் போருக்காக அவ்வுதவி நிதி செலவிடப்படுகின்றது. இதற்கு இலங்கை அரசாங்கத்தின் கடந்தகால வரவுசெலவுத் திட்ட அறிக்கைகள் சான்று பகரும். வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைச் செலவில் பெருந்தொகையான பணம் படையினரின் சம்பளத்திற்கே செலவிடப்படுகின்றது. அதுமட்டுமன்றி பாதுகாப்பு என்ற போர்வையில் ஆயுதத்தளபாடங்கள் மற்றும் யுத்த விமானங்கள், யுத்தக்கப்பல்கள் கொள்வனவுசெய்யப்படுகின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் தமிழர் பிரச்சினையில் அக்கறையற்றதுபோல் 'இந்தாபிடி தமிழரைக்கொல்' என்ற வகையில் இலங்கைக்குத் தாராளமாக நிதியைக் கொடுத்து தமிழின அழிப்பிற்கு உற்சாகமூட்டி வருகிறது.

உலகில் எங்கும் இல்லாதவாறு உள்நாட்டில் ஒரு இனத்திற்கு எதிராக பல்குழல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு அவ்வினத்தின் சொத்துடைமையை நாசமாக்கும் அரசாங்கத்திற்கு உதவுவது உலகநீதிக்கு ஒவ்வாததொன்றாகும் என்பதை உதவிவழங்கும் நாடுகள் உணர்வது அவசியம்.

# மாநகரசபை உறுப்பினர் க. சின்னத்துரைக்கு பதிலளித்து எழுதும் பகிரங்கக் கடிதம்

கடந்த 14-ந் திகதி யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற சுகாதாரக் குழுக்கூட்டத்தில் யாழ். மாநகர சபைக் கௌரவ உறுப்பினர்க.சின்னத்துரை அவர்கள் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் குறித்து தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலான பகிரங்கக்கடிதம் இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)

## குருஷேத்திரம்

**உயர் திரு. க சின்னத்துரை**
கௌரவ உறுப்பினர்
யாழ். மாநகர சபை,
அன்பும் அருளும்
மிக்கவருக்கு
வணக்கம்,

கடந்த 14 ந் திகதி நடந்த சுகாதாரக் கூட்டத்தில் 24-11-2000 ந் திகதி எழுதப்பட்ட வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தை ஒரு கற்பனைக் கதையென்றும் கூறியிருந்தீர்கள். நன்றி தாங்கள் ஒரு அரசியல் வாதி என்ற வகையில் தங்களால் அன்று முதல் இன்று வரை கூறிய கற்பனைக் கதைகள் ஞாபகத்தில் வந்த மாத்திரத்தில் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தையும் அப்படிக் கூற நேரிட்டது எனக் கருதுகின்றேன்.

ஆனால் நவம்பர் 24ந் திகதி எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் பற்றி எழுதப்பட்ட அனைத்து விடயங்களையும் உண்மையென்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். 1990 களில் ஏற்பட்ட இடம்பெயர்வுகளினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் யாழ் மாநகர சபை பகுதிக்குள்ளேயே வந்து சேர்ந்தனர். அன்றைய நிலைமை யாழ்ப்பாணத்தில் எப்படியிருந்தது என்பதை உங்களால் மருந்துக்கேனும் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாது. ஏனெனில் அன்று யாழ்ப்பாண மண் சுறு சுறுப்புடன் இயங்கிய காலம். மீட்பின் உத்வேகம் உரமேறிய காலம். அப்போதெல்லாம் உங்கள் கருத்துக்கள் சபையேறாது என்பதை நீங்களே நன்கு அறிவீர்கள்.

அக்காலகட்டத்தில் ஒரு கிலோ குளோறின் எடுப்பதென்றாலும் எத்தனையோ அரசசார்பற்ற நிறுவனங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. பொருளாதாரத் தடை, போசாக்கின்மையின் தாண்டவம், இடநெருக்கீடு, குடிநீர்ப் பிரச்சினை இப்படி ஏகப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு அதனூடே மக்கள் நலன்காத்த வைத்திய கலாநிதி தெய்வேந்திரனின் பணியை மக்கள் சமூகம் ஒருபோதும் மறந்துவிடாது என்பது திண்ணம்.

ஆனால் நீங்கள் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தை கற்பனைக் கதையென்று கூறுவதைக் கேட்டபோது எனக்கு மிகவும் சிரிப்பாக இருந்தது ஏன் தெரியுமா?

காலம், நேரம் குறிப்பிடாமல் நிகழ்ச்சிநிரல் தயாரிக்காமல் அதிரடியாகக் கூட்டம் கூட்டிவிட்டு அவசர அவசரமாக காரில் ஏறி காப்பரண் சூழ்ந்த கூட்டத்திற்குள் நுழையும் தாங்கள் வெளியில் தலைகாட்டக் கிடைத்த அருமந்த நேரத்தையும் வீணடிப்பதைப் பார்த்தே சிரிப்பாக இருந்தது.

அதுமட்டுமல்ல அன்றைய தினம் தங்கள் தலைமைத்துவத்தின் ஆளுமையையும் பார்க்க முடிந்தது. பதில் ஆணையாளர் ஒரு கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டு சண்டைபிடிப்பது போன்று கதைத்தாரே நீங்கள் தலைமை தாங்கிக் கொண்டிருந்த மேசையில் ஓங்கி அடித்தாரே, அப்பொதெல்லாம் உங்கள் மௌனம், கௌரவர் சபையில் துகில் உரிந்த துச்சாதனனை 'மைந்தா' என்று ஊக்குவித்த காந்தாரிக்கு ஒப்பாகவே இருந்தது.

கௌரவ உறுப்பினர்கள் மத்தியில் பத்திரிகையாளர்கள் பார்த்திருக்க ஒரு பதில் ஆணையாளர் சீறியதை பார்த்துக் கொண்டு நீங்கள் பேசாமல் இருந்ததற்குக் காரணம் அச்சீற்றத்திற்குத் தூண்டுதலே நீங்களோ என்று கூட எண்ணத்தோன்றியது.

பதில் ஆணையாளர் சபைக்குத் தலைமை தாங்கும் அதி உன்னத கௌரவத்திற்குரிய மேசையில் அடித்துப் பேசும் அளவிற்குத்தான் உங்கள் ஆட்சித்திறன் இருக்கிறது என்பதை ஒருகணம் உங்களால் சிந்திக்க முடிந்திருந்தால், வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தை கற்பனை யென்று வாய் தவறியும் கூறியிருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன்.

எனவே ஐயா! இனிமேலாவது இக்கட்டான காலத்தில் மாநகர சபை இயங்கிய-இயக்கியவர்களின் வரலாற்றை ஒரு கணம் படித்துப்பாருங்கள் உண்மை நிலையை அறியுங்கள் எனத் தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்

யாழ் மாநகர சபையின் ஆணையாளர்வே பொ. பாலசிங்கம் அவர்கள் கூட்டத்தில் இல்லாத குறையை உரணமுடிந்ததுடன் அவரின் பண்பானபேச்சுக்கு நிலவிய பஞ்சத்தையும் அங்கு காண முடிந்தது

அத்துடன் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ரவிராஜ் அவர்கள் மேயராகப் பதவியேற்றதை அறிந்து மகிழ்கிறேன். ஏனெனில் இளஞ்சந்ததியின் புதிய சிந்தனை இன்றைய மாறிவரும் உலகிற்கு உடனடித் தேவையாகவுள்ளது. அந்தத் தேவையை கௌரவ மேஜர் ரவிராஜ் அவர்களும் கௌரவ இளம் உறுப்பினர்களும் நிறைவேற்றுவார்கள் என நம்பலாம் அவர்களிடம் காணப்படும் நிதானமும் தூரநோக்குப் பார்வையும் நிச்சயம் யாழ் மாநகரத்தில் ஓர் மேம்பாட்டைக் கொண்டு வருவதுடன், அமைதியாக, ஆன்றோர் சபைக்குரிய இயல்பையும், உரப்பின்றி மெல்லி குரலில் உணர்ச்சிவசப்படாமல் எண்ணியதை எண்ணியாங்குஎடுத்தியம்பும் திறனும் உடைய சபைக் கூட்டங்களையும் காண்போமாக எனக்கூறி இம்மடலை நிறைவுபடுத்துகின்றேன்,

நன்றி

அன்புடன் **விதுரன்**

## டெங்கு பரவும் அபாயம் இடம் பெயர்வும் காரணம்

(ஈச்சமோட்டை)

போர்காரணமாக யாழ் குடாநாட்டையும் ஏனைய பகுதிகளையும் அண்டி மக்கள் இடம் பெயர்ந்துள்ள பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் பெருமளவு அதிகரித்துள்ளது. இதனால் யாழ் குடாநாட்டில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிசமாக ஏற்படுமென மக்கள் அஞ்சுகின்றனர்.

அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர் பகுதிகளில் மக்கள் முற்றாக இடம் பெயர்ந்துள்ளமையும் மேலும் அதை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள தொகை குறைவாக உள்ளதாலும் அப் பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கத்துக்கு ஏற்ற நீர் தேங்கும் பகுதிகளும், பற்றைகளும் மிகமிக அதிகளவில் காணப்படுகின்றன.

இதனால் மலேரியா, டெங்கு, யானைக்கால் நோய்க் கிருமிகளைக் காவும் நுளம்பினங்களின் பெருக்கும் மிகமிக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக யாழ் குடா நாட்டிலும் டெங்கின் அபாய மணி ஒலித்தும் சிலர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டதும், சிகிச்சைபெற்ற ஒருவர் மரணமானதும் தெரிந்ததே.

எனவே டெங்கு நோயின் நோய்க்காரணி (வைரஸ் கிருமி) யாழ். குடாநாட்டில் உண்டு என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எமது பகுதிகளைச் சூழவுள்ள பற்றைகள், புதர்களை வெட்டி அழிப்பதுடன் நீர் தேங்கும் தேவையற்ற பிரதேசங்களை மூடி விடுவதுடன் சுகாதாரப் பிரிவினரின் உதவியை நாடி மேலதிக நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையை தீவிரமாக மேற்கொண்டால் இந்நோயை சட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியும். (கு-59)

## புளியங்கூடலில் நன்னீர் தடுப்பு அணை திறந்து வைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட புளியங்கூடவின்குறுக்கு கடல் பகுதியில் அமைக்கப்பட்ட புதிய நன்னீர் தடுப்பு அணை பெயர்ப் பலகை திறப்பு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

பெயர்ப்பலகையினை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எஸ். செல்வநாயகம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

மழை நீரை வீணாகக் கடலில் சேரவிடாமல் தடுப்பதற்காகவும், கடல் நீரை கிராமத்திற்கு உட்புக விடாமல் தடுப்பதற்காகவும், நன்னீரைச் சேமித்து விவசாய நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும் வசதியாக அமைக்கப்பட்ட அணைக்கு யு.என். எச். சீ. ஆர் நிறுவனம் சுமார் 10 லட்சம் ரூபாவினை வழங்கியதுடன் புளியங்கூடல் கிராம மக்களின் பங்களிப்பான ஒரு லட்சம் ரூபாவினையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. [க-75]

## போர் அழிவுகளை சுட்டிக்காட்டும் வகையில் மட்டக்களப்பில் பிரசுரம்

(மட்டக்களப்பு)

யுத்தத்தை நிறுத்துங்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள் என்ற தலைப்பில் இலங்கை சுதந்திர மனித அபிவிருத்திக் கழகம் பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில், கடந்த 02 வருட காலமாகத் தொடரும் உள்நாட்டு யுத்தத்தினால் 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மரணமடைந்திருப்பதாகவும், 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் அங்கவீனர்களாகி இருப்பதாகவும் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விதவைகளாகியிருப்பதாகவும், மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளதாகவும், பல லட்சக்கணக்கானோர் இடம் பெயர்ந்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 10 ஆயிரத்திற்கும் அதிகமான பிள்ளைகள் பெற்றோரை இழந்திருப்பதாகவும், 20 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பினை இழந்திருப்பதாகவும், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வீடுகள் அழித்தொழிக்கப்பட்டிருப்பதாகவும், 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 10 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழிக்கப்பட்ட சூழலை விலை மதிக்க முடியாதெனவும், தடைப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் பெறுமதி பல கோடி எனவும், ஆயிரக்கணக்கான புனிதத்தலங்கள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் அப்பிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-60)

## பாதசாரிகள் கடவை

(கல்வயல்)

பருத்தித்துறை வீதியில்மந்திகைச் சந்தியில் அமைந்துள்ள பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக பாதசாரிகள்கடவையொன்று அமைக்கப்பட்டுமஞ்சள் நிறத்தீந்தை பூசப்பட்டுள்ளது.

இது முச்சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் நிலவிவந்தஅபாயத்தன்மை இத்துடன் நீங்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இவ்வாறன பாதசாரிகள் கடவையொன்று துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்திற்கு முன்பாகவும்அமைக்கப் பட்டுள்ளது. (உ-111)

## வழமைக்கு திரும்புகிறது

நேற்றுமுன்தினம் படையினர்மேற்கொண்ட கினிகிர 5 இராணுவ நடவடிக்கையினால் தடைப்பட்டிருந்த தென்மராட்சிக் கானபோக்குவரத்து மீண்டும் வழமைபோல் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் தற்போது இல்லை

## கடற்படை துணைத் தளபதி தகவல்

[கொழும்பு]

தமிழகத்திலும், தமிழக கடற்பரப்பிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடுருவல் தற்பொழுது இல்லையென்று கடற்படைத்துணைத் தளபதி தெரிவித்துள்ளார்.

மண்டபம் முகாம் பகுதியில் கடலோர காவற்கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸாரின் கடமைகளை பார்வையிடச் சென்ற கடற்படைத் துணைத் தளபதி அங்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகள் தமிழகத்தில் நடமாடுவதற்கான எந்தவிதமானஆதாரங்களும் இல்லை. அவ்வகையில் அவர்களை தமிழ்நாட்டுக்குள் ஊடுருவியுள்ளார்கள் என்று புகார் தெரிவிப்பது முறையான செயல் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்ளூர் கடத்தல் காரர்களே பணம் சம்பாதிக்கும் நோக்கில் பெற்றோல் டீசல் போன்றவற்றை கடத்தி ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள் எனவும் இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மெனவும் அவர் தெரிவித்துள்ளார். [இ]

### மகேஸ்வரன்-எம்.பி பார்வையிட்டார்

[மந்திகை]

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலுள்ள கைதிகளை ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் நேற்று சென்று பார்வையிட்டதுடன், கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவர்களிடம் கேட்டறிந்து கொண்டார். (ந-23)

### பாடசாலையில் தளபாடப் பற்றாக்குறை

(மல்லாகம்)

மயிலிட்டி றோமன் கத்தோலிக்கதமிழ்க்கலவன்வித்தியாலயத்தில் மாணவர்களுக்குரிய தளபாடப் பற்றாக்குறை நிலவிவருகிறது.

சிலதளபாடங்கள் மட்டுமே பாவிக்கப்படுவதாகவும், அண்மையில் நடைபெற்ற கலை நிகழ்வுகளுக்கு தளபாடங்களைஇரவல்வாங்கியேபாவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு பெற்றோர் மற்றும் பாடசாலைநிர்வாகமும் இணைந்து கடிதம் அனுப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

---

**நாட்டின்**

சபாநாயகர் அனுரா பண்டார நாயக்காவும் நத்தார் விடுமுறைக்காக கலிதோர்னியா செல்லவுள்ளார். [ந]

### ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நத்தார்மற்றும் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு யாழ் குடா மக்களின் நலன் கருதி பாதுகாப்புப் படையினரின்கட்டுப்பாட்டின் கீழ்உள்ள சகல பிரதேசங்களிலும் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்குச்சட்டம் இம் மாதம் 24ம்திகதி இரவு 8.மணிமுதல்25ம்திகதிகாலை 6.மணிவரையிலும் எதிர்வரும் 31ம் திகதிஇரவு 8 மணியிலிருந்து2001ஆண்டுஜன வரி 1ம் திகதி காலை 6. மணி வரையிலும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும் என பாதுகாப்பு நடவடிக்கை விலைமையகம் அறிவிப்பு தடுத்துள்ளது. (ந-4)

---

**சிறுமி மீது**

நடத்திவந்த மேற்படி முதியவர் சிறுமியை கடைக்கு வருமாறு அழைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக தெரிவிக்கப் படுகிறது.

இச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டபிரஸ்தாப சிறுமி தற்போது கல்விகற்பதில் நாட்டம் காட்டாது சித்தப்பிரமை பிடித்தவர் போன்று காணப்படுவதாக சிறுமியின் தாயார் தெரிவித்துள்ளார். (இ)

---

**பேச்சு**

விழாவில் காப்பாளர் வி. பி. தேவராஜ் கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு சகஜநிலையை ஏற்படுத்த வேண்டும். சகஜநிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்படவேண்டும் என்றும் சுட்டிக் காட்டினார் (வ)

---

**நடுநிலையாளர்..**

யாக்கியுள்ளது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஆவலுடன் நோக்கியுள்ள மக்களுக்கும் சமாதானத் தீர்வை ஆர்வத்துடன் செயற்பட்ட நோர்வே அரசுக்கு இனவாதிகளின் போக்கு பலத்த அடியாக இருக்குமானால் நோர்வே அரசுதானாகவே தனது சமாதான முயற்சியில் இருந்து நழுவிக் கொள்ளும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

---

**பேச்சுர்வாத்தை**

துள்ள நிலையில் பேச்சு வார்த்தை எனும் போர்வையில் தம்மை பலப்படுத்திக் கொள்வதும் யுத்தத்தை ஆரம்பித்து நடத்துவதும் அவர்களது கடந்த கால செயற்பாடு. இது எமக்கு கடந்த காலம் கற்றுத்தந்த பாடம். இதனை மறந்து நாம் ஒருபோதும் செயற்பட முடியாது என்று தெரிவித்தார். (இ)

---

**பரிஸ்**

ரில் இடம்பெறுவதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதிநிதியமைச்சர் பேராசிரியர் பிரீஸ், அமைச்சர்கள் எஸ்.பி.திஸாநாயக்கா, இந்திகாகுணவர்த்தன ஆகியோர் கலந்து கொள்ளுவர். [ந]

### பொலிஸார் சென்ற ஒட்டோ மீதுசூடு

(திருகோணமலை)

திருகோணமலையில் கந்தளாய் பகுதியிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் ஒட்டோவை நிறுத்தாது வேகமாகசென்றதால் காவல்கடமையிலிருந்த பொலிசார் ஒட்டோமீது துப்பாக்கிபிரயோகம் மேற்கொண்டனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒட்டோவில் சென்ற பொலிசார் மற்றும்அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் சோதனைச் சாவடியில் ஒட்டோவை நிறுத்தாது தப்பித்து செல்வதாகக்கருதியே ஒட்டோமீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### உலக வங்கித் தலைவருடன் ஜனாதிபதி சந்திப்பு

(பாரிஸ்)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா நேற்றுஉலகவங்கித்தலைவர்களைக் கண்டுபேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின்கூட்டம் இன்று பரிஸில் நடைபெறுவதற்கு முன்பாக சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

உலகவங்கித் தலைவரைத் தனியாகச் சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா இலங்கையின் அண்மைக்கால நிகழ்வுகள் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த் நோர்வே அரசின் சமாதான முயற்சி தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு குறித்து கலந்துரையடியாதாகத் தெரிவிக்கப்படுகிறது [வ]

### சமாதானத்தைவலியுறுத்தி மட்டக்களப்பில் பேரணி

(மட்டக்களப்பு)

யுத்தத்தை நிறுத்தி சமாதான பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கக் கோரி மட்டக்களப்பு நகரில் நேற்று சமாதான பேரணியொன்று நடைபெற்றது.

சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சமாதான பேரணிகத்தோலிக்கமண்டப முன்றலிலிருந்து புறப்பட்டு நகர வீதிகள் வழியாககாந்தி சதுக்கத்தைசென்றடைந்தது.

பாடசாலை மாணவர்கள், மதப்பிரமுகர்கள், மனித நேய அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட சுமார் 1000 பேர் வரை இதில் கலந்து கொண்டனர்.

காந்திசதுக்கத்தில் சுமார் 30 நிமிடங்கள் கவன ஈர்ப்புப்போராட்டத்தில் ஈடு பட்டசமாதானபேரணிமீண்டும் அங்கிருந்து புறப்பட்டு நகர வீதிகள்வழியாக வில்லியம் மண்டபத்தைசென்றடைந்து,

இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள்யுத்த நிறுத்தம்பேச்சுவார்த்தை ஆகியவற்றைவலியுறுத்தியும்.

வன்முறைகள் மனித உரிமைமீறல் களுக்கு எதிராகவும் சுலோக அட்டைகளையும் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இப்பேரணி புறப்பட்டு சில நிமிடங்களில் இனந்தெரியாத நபரொருவரினால் சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் பெயரில் மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகத்தின்படுகொலைபற்றிய துண்டுப் பிரசுர மொன்று விநியோகிக்கப்பட்டது.

இந்த துண்டுப் பிரசுரம் சில விஷமிகளின் செயல் என்றும் இதற்கும் தமது சங்கத்திற்கும் தொடர்புகள் இல்லை என்றும் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார். (ம-60-108)

---

**சமாதான**

லைப் புலிகளையும் சமாதானப் பேச்சு வார்த்தைக்குக் கொண்டுவரும் முயற்சியில் நோர்வே இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக இந்த அறிக்கை விளக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போரில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரினதும் செயற்பாடுகள் அவர்கள் வெளியிடும் அறிக்கைகள், பேச்சுக் களுக்கெதிராகவும் முட்டுக் கட்டை போடுவதாக அமைகிறது என்றும் அந்தஅறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ)

### டொமினிக்ஜீவா அவுஸ்ரேலியாபயணம

(கொழும்பு)

ஈழத்தின் பிரபலஎழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக்ஜீவா அவுஸ்திரேலியா பயணமாகவுள்ளார் ஐரோப்பிய புலம்பெயர்ந்தோர் தமிழ்எழுத்தாளர் ஒன்றியத்தின்27வதுஇலக்கியக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காகவே டொமினிக்ஜீவா அவுஸ்திரேலியா பயணமாகவுள்ளார். அடுத்த வருடம் ஜனவரி மாதம்10ம் திகதி முதல்15திகதிவரை கனடாவில்நடைபெறும்இலக்கிய கருத்தரங்கு ஒன்றிலும் கிறப்புவிருந்தினராக இவர் கலந்து கொள்ளவுள்ளார். (வ)

### கடைஎரிந்து நாசம்

குளவிக் கூட்டைக்கொழுத்திய போது பரவிய தீயினால் வர்த்தகநிலையமொன்று எரிந்து சாம்பரானது.

இச்சம்பவம் நீர்வேலிச்சந்தியில் நேற்று முன்தினம் மாலை 7.மணியளவில்இடம் பெற்றது.

### விவசாயி வெட்டிக்கொலை

(வவுனியா)

வவுனியாசெட்டி குளப்பகுதியில் 42வயதான விவசாயி ஒருவர் இனந்தெரியோரால் கூட்டிச்செல்லப்பட்டு வெட்டிக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம்நேற்று அதிகாலை மணியர்குளம் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையின்பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பானமரண விசாரணை இன்று நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது' (வ)

ஜீ.ரி.சற், அரசசார்பற்ற நிறுவனங்களால்

புனரமைப்புச் செய்யப்படும் வீட்டுத்திட்டங்கள், பாடசாலைக்கட்டடங்கள் போன்றவற்றுக்குப் பயன்படும் சீமெந்துக்கூரைஓடுகள் முகட்டோடுகள்

விற்பனைக்கு உண்டு.

இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்கு உண்டு.

தொழிற்சாலையும் விற்பனை நிலையமும்

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை, இணுவில்.

Loges Sheet Indusries (LMCRS)

INUVIL. (2003)

உடன் வாங்கப்படும்

பாவித்த மேசை, அலுவலக மேசை கதிரைகள் உடன் வாங்கப்படும்.

விற்கவுள்ளோர் நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 100

வலம்புரி

15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

### பிரிவுத் துயர் பகிர்வு

**சகோதரி குளோறி சண்முகம்**

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த சகோதரி குளோறி சண்முகம் 16-12-2000 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இறுதி ஆராதனை இன்று பி.ப. 2-30 மணிக்கு இடம்பெற்று கொட்டடி சேமக்காலைக்கு பூதவுடல் எடுத்துக் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:- இலங்கை பெந்தெகொஸ்தே சபை.

**வேலுப்பிள்ளை தனபாலரத்தினம்**

யாழ் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடி பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலரத்தினம் 16-12-2000 அன்று கொழும்பில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:- தர்மிகா (மகள்)

ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)

கமல் - ஜோதிகா தேவயானி நடித்த

தெனாலி

(வெட்டுப்படாத நேரடி CD)

10.30, 2-30

[கி-688]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம்18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.